விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 339 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 07 வியாழக்கிழமை (23.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி

## ஐந்து மனித எச்சங்களுடன் புலிகளின் இலக்கத்தகடும் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வுப் பணியானது மீள ஆரம்பிக்கப்பட்டு நேற்று மூன்றாவது நாளாக வும் தொடர்ந்து நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, 15



## முடிந்தால் முதலில் உள்ளூராட்சி தேர்தலை நடத்துங்கள்

### ஜனாதிபதிக்கு சஜித் சவால்

(கொழும்பு)

முடிந்தால் உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலை நடத்துங்கள் என எதிர்க்கட் சித் தலைவர் சஜித் பிரேம தாச ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவிற்கு சவால் விடுத்துள்ளார்.

நேற்று இடம் 15



### மகிந்த, கோட்டாபய, பசில் உள்ளிட்ட

## பொருளாதாரக் குற்றவாளிகளின் குடியுரிமையை பறிக்க முடியும்

### நிபந்தனையை விளக்குகிறார் நீதி அமைச்சர்



(கொழும்பு)

பொருளாதார குற்றவாளிகளாக தீர்ப் பளிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ உள்ளிட்டோரின் குடியுரிமையை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவையின் அனுமதியும் பாராளுமன்றத்தின் மூன்றி லிரண்டு பெரும்பான்மையும் அவசியம் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## செப்ரெம்பர் மாதத்துக்கான நலன்புரிக் கொடுப்பனவுகள்

### இன்று முதல் வங்கிக் கணக்குகளில்

(கொழும்பு)

செப்ரெம்பர் மாதத்துக்கான அஸ்வெசும கொடுப் பனவாக 8 ஆயிரத்து 571 மில்லியன் ரூபாய் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நேற்று பாராளு மன்றில் உறுதிப்படுத்தியுள்ளார்.

13 லட்சத்து 77 ஆயிரம் குடும்பங்களுக்கு 15

### சித்தங்கேணி இளைஞன் மரணம்

## யாழ்.நீதிமன்ற நீதவான் நேரில் சென்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் பொலிஸா ரின் சித்திரவதை காரணமாக கடந்த ஞாயிற் றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இளைஞரின் உயிரிழப்பு யாழ்ப் 04

## அடுத்தாண்டு தேர்தல்கள் இடம்பெறுவது உறுதி



### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

அடுத்தாண்டு ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் இரண்டும்நிச்சயம் நடந்தே ஆகும்.

எக்காரணம்கொண்டும் அவை ஒத்திவைக்கப்படமாட்டாது என 15

## குற்றவாளிகளுக்கு நிதி ஒதுக்கீடா! வாக்கெடுப்பைக் கோரினார் அநுர

(கொழும்பு)

பொருளாதார படுகொலை யாளிகள் என்று உயர்நீதிமன் றத்தால் பெயர் குறிப்பிடப்பட் டுள்ள முன்னாள் ஜனாதிபதி களான மகிந்த ராஜபக்ஷ மற் றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு நிதி ஒதுக்கு வது முறையற்றது எனத் தெரி வித்து மக்கள் விடுதலை முன் னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க ஜனாதி பதிக்கான நிதி செல வினங்களுக்கான 15



லக்கி Lucky 7 லக்கி
124 ஆவது சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம்
(C-2171)
வெற்றி
கந்தப்பொலவுக்கு
லொத்தர் சீட்டை விற்பனை செய்தவர்
திரு.திவங்க ஜயரத்ன
வெற்றியாளருக்கு எங்களது வாழ்த்துக்கள்
அடுத்த கோடீஸ்வரர் நீங்களாக இருக்கலாம்!
இன்றே வாங்கிடுங்கள்

உங்களுடைய டிக்கட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
18 . 01 . 1945



விண்ணில்
20 . 11 . 2023

## அப்பாக்குட்டி தர்மலிங்கம்

கண்ணகை அம்மன் கோவிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி தர்மலிங்கம் அவர்கள் 20.11.2023 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் சத்தியதேவியின் பாசமிகு கணவரும் கேதீஸ் அவர்களின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லமணி, சண்முகலிங்கம், மகாலிங்கம், சிவலிங்கம், பஞ்சலிங்கம் மற்றும் பரம்சோதி, அமிர்தலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவரான இராமலிங்கம், கமலாதேவி மற்றும் மகேஸ்வரி, சத்தியதேவி, இராஜேஸ்வரி, செல்வநிதி, பௌசி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கிருஷ்ணவேணியின் மாமனாரும் தர்மிகா, நர்மதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.11.2023 நாளை வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் உரும்பிராய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்ணகை அம்மன் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (17959)

தகவல் : குடும்பத்தினர்
077 497 2736

## 2024 பாதீடு
# குழு நிலை விவாதம் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

2024 ஆம் நிதியாண்டுக்கான பாதீட்டின் மீதான குழு நிலை விவாதம் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை ஞாயிற்றுகிழமைகள் தவிர, 19 நாட்களுக்கு இடம்பெறவுள்ளது.

இதனையடுத்து பாதீட்டின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு அடுத்த மாதம் 13 ஆம் திகதி மாலை 6 மணியளவில் நடத்தப்படவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் 2024 ஆம் நிதியாண்டுக்கான பாதீட்டு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 45 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (7,9)


மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7704)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470


# 33 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



யாழ் மாவட்ட சமூக அபிவிருத்தி மன்ற ஸ்தாபகரும் சி.க.கூ சங்க முன்னாள் தலைவரும், இணைப்பதிகாரியுமாகிய ஓய்வு பெற்ற சிரேஸ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (17952)

## அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

அவர்களின் சேவையினை நன்றியுடன் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

பிறப்பு 06.10.1927
இறப்பு 23.11.1990

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

276, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



அன்னை மடியில்
14.10.1938

சிவன் அடியில்
21.11.2023

## நவரட்ணம் விக்னேஸ்வரன்
### (ஓய்வு பெற்ற இலங்கை புகையிரத இயந்திர சாரதி)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் இலங்கை பிரம்மகுமாரிகள் இராஜயோக தியான நிலைய மூத்த உறுப்பினருமான நவரட்ணம் விக்னேஸ்வரன் அவர்கள் 21.11.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான போல் நவரட்ணம் - அன்னலட்சுமி தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகம்மா தம்பதியினரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற லோகாம்பிகை(B.Kலோகா) அவர்களின் அன்புக் கணவரும் கருணரட்ணராஜா(கனடா), ராஜேஸ்வரன்(அவுஸ்திரேலியா), கோணேஸ்வரன்(கனடா), சந்திரவதனி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் யசோதா(திருகோணமலை), நிவேதிதா(BK ராதே), கோபிதா (BK கோபி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகன்மோகன் (ஆசிரியர்) அவர்களின் மாமனாரும் வித்யாசாகரி, அம்ருத்ஷாகர் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு வைத்தியசாலை வீதி, தெல்லிப்பளையில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலையத்தில் 24.11.2023 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
W.கோபிதா (மகள்)
077 221 5102

வைத்தியசாலை வீதி,
தெல்லிப்பளை. (17962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு இலங்கை ஒருபோதும் நீதி வழங்காது

## மீண்டும் உணர்த்தியுள்ளது அலெக்ஸின் மரணம்

**(யாழ்ப்பாணம்)**

**தமிழர்களிற்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களிற்கு நீதியை வழங்கப்போவதில்லை, பொறுப்புக்கூறலில் ஈடுபடப்போவதில்லை என்பதை வெளிப்படுத் துவதில் இலங்கை தனது வலுவான அரசியல் உறுதிப்பாட்டை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வந்துள்ளது என பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.**

அவ் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது, 25வயது நாகராஜா அலெக்ஸ் உயிரிழப்பதற்கு முன்னர் தான் பொலிஸாரின் பிடியில் அனுபவித்த ஈவிரக்கமற்ற சித்திரவதைகள் குறித்து தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து அரசாங்கம் எடுத்த முதல் நடவடிக்கை பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ள விசேட அதிரடிப்படையினரை பொலிஸ் நிலையத்தை பாதுகாப்பதற்காக நிறுத்தியதாகும். இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்து வதற்கு சர்வதேச சமூகம் தவறியுள்ளமை காரணமாகவே அலெக்ஸின் மரணம் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில்தடையின்றிவளரவிடப்பட்டுள்ள தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் கலாசாரம் முடிவிற்கு கொண்டுவரப்படும்வரை தமிழ்மக்களிற்கான சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கிய அர்த்த பூர்வமான அரசியல் தீர்வு சாத்தியமாகும் வரை நிலையான சமாதானமோ ஸ்திரத்தன்மையோ காணப்படாது என்பதை அலெக்ஸின்மரணம்மீண்டும் உணர்த்தியுள்ளது. (நி-5-6)

## தென்னை பயிர்ச்செய்கையை ஊக்குவிக்குமாறு பணிப்புரை

(கொழும்பு)

விவசாய அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில், தேங்காய்களின் தினசரி நுகர்வு சுமார் 4.5 மில்லியன்கள் ஆகும். எனினும் தேங்காய்களின் தினசரி உற்பத்தி சுமார் மூன்று மில்லியன்கள் என்று தெரிய வந்துள்ளது.

எனவே, இடவசதி உள்ள ஒவ்வொரு வீட்டுத்தோட்டத்திலும் தென்னையை பயிரிட மக்களை ஊக்குவிக்கும் திட்டத்தை செயற்படுத்துமாறு தேசிய தென்னை அபிவிருத்திச் சபைக்கு விவ சாய அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது. நாட்டின் நுகர்வுக்கு பயன்படக்கூடிய பெருமளவிலான தென்னை மரங்கள் நாளாந்தம் அழிக்கப்ப டுகின்றன.

இலங்கையில் மொத்த தேங்காய் உற்பத்தியில் 75 வீதம் உள்ளூர் நுகர்வுக்கு பயன்படுத்தப்படுகிறது. எனினும் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு இன்னும் அபிவிருத்தி செய்யப்படவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, இடவசதி உள்ள ஒவ்வொரு வீட்டுத்தோட்டத்திலும் தென்னை மரங்களை வளர்க்க மக்களை ஊக்குவிக்கும் திட்டத்தை செயற்படுத்த தேசிய தெங்கு அபிவிருத்தி திணைக்களத்துக்கு விவசாய அமைச்சர் உத்தர விட்டுள்ளார். (நி-5-6)

## மண்மேடு சரிந்ததில் புதைந்த கடைகள்

### ஒருவர் உயிரிழப்பு



(பேராதனை)

பேராதனை பேருந்து நிலையத்திற்கு அருகில் மண்மேடு சரிந்து விழுந்ததில் கடையிலிருந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு பெய்த அடைமழை காரணமாக கொழும்பு செல்லும் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள மண்மேட்டின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்துள்ளது.

அருகில் இருந்த 4 கடைகள் மண்மேட்டின் கீழ் புதைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த இடத்திற்கு அருகில் உள்ள அறையில் தங்கியிருந்த பேராதனை பிரதேசத்தை சேர்ந்த 68 வயதுடைய நபரே உயிரிழந்தவராவார். (நி-5-6)

## இலங்கை-சீன ஒப்பந்தம்; ஐ.எம்.எப் மகிழ்ச்சி

(கொழும்பு)

இலங்கைக்கும் சீன எக் சிம் வங்கிக்கும்இடையில்ஏற்பட்டுள்ள உடன்படிக்கை இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப் பதில் நல்லதொரு படியென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

அனைத்து உத்தியோக பூர்வ கடன்வழங்குநர்களிடமிருந்தும் நிதி உத்தரவாதங் களைப் பெற்றவுடன் ஐ.எம்.எப் இன் மீளாய்வு இடம்பெறும் என சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு பிரதானி பீட்டர் ப்ரூவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## மூன்று வகையான சிகரெட்டுகளுக்கு தடை

(கொழும்பு)

இலங்கை புகையிலை நிறுவனத்தினால் விநியோகிக்கப்படும் மூன்று வகையான சிகரெட்டுகளின் விற்பனை உடன் அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, Dunhill Switch, Dunhill Double Capsule மற்றும் John Player Gold Pro Cool ஆகிய சிகரெட் விற்பனை கடந்த 17 முதல் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சிகரெட்டுகளின் விற்பனையை உடனடியாக நிறுத்துமாறும் கடைகளில் வாடிக்கையாளர்களுக்கு இந்த சிகரெட் பாக்கெட்டுகளை காட்சிப்படுத்தினால் அவற்றை அகற்றுமாறும் சில்லறை விற்பனையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.(நி-5-6)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



2023 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யாழ்/ இணுவில் மத்திய கல்லூரி மாணவன்

செல்வன். பி. மிதுரன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் கல்வியில் முன்னேற வாழ்த்துகின்றோம்.

(17950)

வாழ்த்துவோர்: குடும்பத்தினர்.

வட்டுவினி லேன், இணுவில்.


## இரண்டு வாரங்களுக்கு சனத் நிஷாந்த இடைநிறுத்தம்



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் முறை கேடாக நடந்து கொண்ட இரா ஜாங்க அமைச்சர் சனத் நிஷா ந்த இரண்டு வாரங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமான குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றியிருந்தார்.

இதன்போது குறுக்கிட்ட சனத் நிஷாந்த உள்ளிட்ட ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரை பேச விடாமல் இடையூறு விளை வித்திருந்தனர்.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பாராளுமன்றத்தில் அநாகரீகமாக நடந்து கொண்ட காரணத்தால் நேற்று முதல் 2 வார காலத்திற்கு பாராளுமன் றத்தில் இருந்து இடைநிறுத் துவதாக சபாநாயகர் அறிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வழக்குத் தள்ளுபடி

# திட்டமிட்டபடி உ/த பரீட்சை

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை பிற்போடப்பட மாட்டாது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சையை ஒத்தி வைக்குமாறு கோரி உச்ச நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், குறித்த வழக்கு நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதன் பிரகாரம் இந்த ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை முன்னர் திட்ட மிட்ட படி 2024 ஜனவரி 04ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.(ந-7,9)

## யாழ்.நீதி...

பாணம் நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் இடம்பெற்றமையால் இளைஞரின் உயிரிழப்பு தொடர்பான விசாரணைகள் யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ ஆனந்தராஜா முன்னிலையில் இடம்பெற்று வருகின்றது.

இளைஞரின் உடற்கூற்று பரிசோதனைகள் நேற்றுமுன்தினம் மதியம் யாழ்.போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி உ.மயூரதன் மேற்கொண்டபோது நீதவான் வைத்தியசாலைக்கு நேரில் சென்று சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்து சிறைச்சாலைக்கும் அவர் நேரில் சென்று சிறைச்சாலை அத்தியட்சகர், உத்தியோகஸ்தர்கள், உள்ளிட்டவர்களிடம் வாக்குமூலங்களையும் பெற்றுக்கொண்டார். உயிரிழந்த இளைஞரின் குடும்பத்தினர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி வி. திருக்குமரன், சட்டத்தரணி ரிஷிகேஷவன், மற்றும் சட்டத்தரணி மயூரன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர் .

இதேவேளை, உயிரிழந்த இளைஞருடன் கைதான மற்றைய இளைஞர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். உயிரிழந்த இளைஞர் மற்றும் அவரது நண்பரான மற்றைய இளைஞர் ஆகியோர் மீது நகைத் திருட்டு குற்றச்சாட்டு சுமத்தி வட்டுக்கோட்டை பொலிஸாரினால் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது இருவரையும் மன்று விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதைத் தொடர்ந்து இருவரும் யாழ்ப்பாணம் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலே அலெக்ஸ் எனும் இளைஞன் உயிரிழந்தார். மற்றைய இளைஞர் தொடர்ந்து சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று நீதிமன்றம் அவரைப் பிணையில் செல்ல அனுமதித்தது.

இதேவேளை பிரஸ்தாப இளைஞரிடம் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நாளை வெள்ளிக்கிழமை யாழ்.நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (ந-7,9)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

### வலிகாமம் வடக்கு பிரதேச சபை உப அலுவலகம் - தெல்லிப்பளை

விண்ணப்பதாரர் - அன்ரனி மோகனதாஸ் மனைவி சுபோஜினி
முகவரி - உயரப்புலம், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம் - 01, ஆதன இலக்கம் 249, கே.கே.எஸ் பொன்னாலை வீதியில் அமைந்துள்ளது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.J.S.A.மதுரநாயகம் முகதாவில் 7198ஆம் இலக்கத்தில் 12.02.2022ஆம் திகியில் முடிந்த அறுதி உறுதிப்படி அன்ரனி மோகனதாஸ் மனைவி சுபோஜினி என்பவருக்கு அறுதியளிக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோயிற்பற்று தெல்லிப்பளை மேற்கு இறையுமான "காளியாணை புதுக்காடு" நிலப் பரப்பு 6பரப்பு 16.90 குளி இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் B.பிரணவன் அவர்கள் வரைந்த 1311-2022.12.27ஆம் இலக்க திகதிய வரைபடத்தின்படி துண்டு - 01ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு - S.பிலிப்புப்பிள்ளையினதும் மறுபேரினதும் ஆதனம்
வடக்கு - றோட்டு
மேற்கு - Lot 2 ஆகிய இதன் மிகுதி ஆவணம்
தெற்கு - R.தம்புவினதும் மறுபேரினதும் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை அன்ரனி மோகனதாஸ் மனைவி சுபோஜினி எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
செயலாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

(17964)

## கோடிக்கணக்கான மக்களின் இதயத்தை உடைத்ததற்கு மன்னியுங்கள்!

### அவுஸ்திரேலிய வீரர் டேவிட் வோர்னர்



கோடிக்கணக்கான மக்களின் இதயத்தை உடைத்ததற்கு மன்னிப்பு கேட்கிறேன். இந்திய ரசிகர் ஒருவரின் பதிவிற்கு பதிலளித்த அவுஸ்தி ரேலிய வீரர் டேவிட் வோர்னர் இந்திய ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

முற்றிலும் நம்பமுடியாத உலகக் கிண்ணத்தை நடத்தியதற்காக இந்தியாவுக்கு முதலில் நான் நன்றி சொல்ல விரும்புகிறேன். இந்தத் தொடர்களில் எடுக்கப்பட்ட முயற்சி மிகப்பெரியது. இந்த. தொடருக்கு பின்னால் அனைவரும் மிகவும் சிறப்பாக செயற்பட்டனர்.இங்குள்ள ரசிகர் சூழல் நம்ப முடியாத அளவில் இருந்தது. உங்கள் பொறுமை மிகவும் பாராட்டத்தக்கது. நீங்கள் இல்லாமல் நாங்கள் அனைவரும் விரும்பும் விளையாட்டை விளையாட முடியாது. கோடிக் கணக்கான இந்திய இரசிகர்களின் இதயத்தை உடைத்ததற்கு மன்னிப்பு கேட்கிறேன் என வோர்னர் தெரிவித்தார். நி-5-6)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம் சம்பந்தமான அறிவித்தலும் ஆட்சேபனை கோரலும்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட 4 ஆம் வட்டாரம், காரைநகர் வீதியிலுள்ள ஆதனவரிப்பதிவேட்டின்படி பழைய இலக்கம்: 341, 343, 345 ஐக் கொண்டதும் புதிய இலக்கம்:341 ஐக் கொண்டதுமான ஆதனம் எமது ஆதனப்பதிவேட்டின்படி சொந்தக்காரரின் பெயர் முத்தையா கதிர்வேல் என்றே காணப்படுகின்றது.

பெயர் மாற்றத்திற்கு உட்படும் ஆதனத்தினை முத்தையா கதிர்வேல் அவர்கள் பிரசித்த நொத்தாரிசு பரமகுரு, இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5403 இலக்க 2005.09.16 ஆம் திகதிய உறுதியாலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம்.செல்வராஜா அவர்களால் 2018.10.30ஆம் திகதி அளவீடு செய்யப்பட்டு 2018.11.01 ஆம் திகதி வழங்கப்பட்ட 1383 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு 01 (பரப்பு 04, குழி 17.46) எனக் காட்டப்பட்டதுமான ஆதனமானது, சுழிபுரம் மேற்கு கதிரவேலு முத்தையாவும் பெண் யோகசுந்தரமும் அவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவர்களானார்கள். குறித்த உறுதியில் இவ் ஆதனம் 1986 ஆம் ஆண்டு ஆனி மாதம் 18 ஆம் திகதியிலும் 1986ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 17 ஆம் திகதியிலும் நொத்தாரிசு மு.சபாநாதன் முன்னிலையில் 2545 ஆம் இலக்கத்திலும் 2636 ஆம் இலக்கத்திலும் முடித்த அறுதி உறுதிகளின் படி எங்கள் கொள்வனவும் ஆட்சியுமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் 6120 ஆம் இலக்க 2012.10.03 ஆம் திகதிய ஈட்டுறுதி மற்றும் 5161 ஆம் இலக்க 2015.04.18 ஆம் திகதிய மேலதிக ஈட்டுறுதி மூலம் முத்தையா கதிர்வேல் அவர்கள் KMK Sea Food Pvt Ltd இன் சார்பாக இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் ஈடு வைத்திருந்தார்.

இந்நிலையில், முத்தையா கதிர்வேல் அவர்கள் 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த சூசைப்பிள்ளை எட்வின் அவர்களுக்கு குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சி.க.ரண்சிங்க முகதாவில் நிறைவேற்றப்பட்ட 189 ஆம் இலக்க 2018.05.03 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் விற்பனை செய்திருந்தார். எனினும் குறித்த சூசைப்பிள்ளை எட்வின் அவர்கள் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்திருக்கவில்லை.

இவ்வாறிருக்கையில், குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு சிறிமளா திருநாவுக்கரசு அவர்களால் 929 ஆம் இலக்க 2023.05.26 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட நிபந்தனைக்கட்டுப்பாடு மூலமாக இலங்கை வங்கி மானிப்பாய் கிளைக்கு உடைமையானது.

இதனடிப்படையில், குறித்த ஆதனம் நொத்தாரிசு அற்ற 678 ஆம் இலக்க 2023.07.27 ஆம் திகதிய விற்பனைப்பத்திரம் மூலம் இலங்கை வங்கிப் பணிப்பாளர் ரொனால்ட் சித்திராஞ்சன் பெரஹெரா பொது முகாமையாளர் ரஷல் பத்மராஜ் ஹேமத் பொன்சேக்கா இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம் கொழும்பிற்கு உடைமையானது.

குறித்த ஆதனத்திற்கு தற்போது இலங்கை வங்கி மானிப்பாய் கிளையினால் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறித்த ஆதனத்தை இலங்கை வங்கியின் பெயரிற்கு ஆதனப் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இருப்பின் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாக, வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனை தெரிவிக்குமாறும், எவரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் இலங்கை வங்கியின் பெயரிற்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இவ் ஆதன உரிமை மாற்றம் செய்வதனால் வரக்கூடிய சட்ட ரீதியான எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சண்முகராஜா பாலரூபன்,**
செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

(C-7705)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் நம்பிக்கையை இழந்த ராஜபக்ஷக்கள் ராஜினாமா செய்ய வேண்டும்

## சுமந்திரன் எம்.பி வலியுறுத்து

(கொழும்பு)

தவறை ஏற்றுக்கொண்டு மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களை இராஜினாமா செய்ய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் நம்பிக்கையை இழந்தும் அவர்கள் தொடர்ந்தும் மக்களின் சார்பாக பாராளுமன்றில் இருப்பது தவறு என்றும் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், சட்டத்தையும் ஜனநாயகத்தையும் மதிப்பவர்களாக இருந்தால் இராஜினாமா செய்வதே உகந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(நி-5-6)


**பெறுகை அறிவித்தல்**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி**

22.11.2023 நேற்றைய வலம்புரிப் பத்திரிகையில் 07 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய "பெறுகை அறிவித்தல் நகராட்சி மன்றம் சாவகச்சேரி" விளம்பரத்தில் ஐந்தாவது நிபந்தனையினை

5. சேவை வழங்குநர்கள் நகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நாட்களில் **22.11.2023 தொடக்கம் 05.12.2023 ஆம் திகதி பி.ப 03.00 மணிவரை** மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக்கட்டணமாக **ரூபா 2,000.00 (VAT,NBT நீங்கலாக)** இனைச் செலுத்தி பெறுகை விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**எனத் திருத்தி வாசிக்கவும்.**

**தலைவர், பெறுகைக் குழு,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**



22 கரட்டுக்கு
ரூ.115,000
அதிக அடகுத் தொகை



பான் ஏஷியா ரண் அத்தம
தேவைக்கு உதவும் தங்கமான சிநேகிதம்
011 4 667 222
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
பான் ஏஷியா பேங்கிங் கோபரேஷன் பி. எல். சி., இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படும் ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும்.
கம்பனி பதிவு இலக்கம் PQ48. ஃபிட்ச் ரேட்டிங் BBB-(LKA) Stable Outlook
(சி-2170)
பான் ஏஷியா வங்கி
உன்னதமான உள்நாட்டு வங்கி


# இராசிபலன்

23.11.2023
கார்த்திகை 07 வியாழக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 8.47 மணிவரை
உத்திரட்டாதி பிற்பகல் 5.35 மணிவரை

சுபநேரம் - 7.41-9.11 மணிவரை
இராகுகாலம்- 1.41-3.11 மணிவரை
உத்தான ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்- மகம், பூரம்.

**வளவன்**

**மேஷம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், மனநிறைவு கூடும் நாள், செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கடகம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்** தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கன்னி** கேளிக்கை கொண்டாட்டங்களில் நாட்டம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் திருப்தி காணும் நாள்.

**துலாம்** நீண்டநாளை பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபசெய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** உள்ளம் மகிழும் சம்பவமொன்று இடம்பெறலாம், ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு, செல்வ நிலை உயரும்.

**மீனம்** வழிபாடு ஆனந்தம் தரும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், பக்குவமாகப் பேசிக் காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**எதிலும் போட்டி இருந்தால் தான் விரைவில் வளர்ச்சியடையமுடியும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்பு,கோடாவுடன் சந்தேகநபர் கைது

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரான்பற்று பகுதியில் 200 லீற்றர் கோடா மற்றும் 5 லீற்றர் கசிப்பு ஆகியவற்றுடன் 47 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இளவாலை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதுடன் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6-104)




# வடக்கில் 3 தொழிற்பேட்டைகள் அமைக்கும் நடவடிக்கைகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

**வடமாகாணத்தில் மூன்று தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெறுகிறது என இலங்கை முதலீட்டுச் சபையின் வலய முகாமைத்துவ பிரதம நிறைவேற்று பணிப்பாளர் எம்.கே.டி.லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.**

வடமாகாணத்தில் மேற்கொள்ளக்கூடிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பான கலந்துரையாடல், மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன தலைமையில், வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிலையில் வட மாகாணத்தில் மூன்று தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்படுவதாக இலங்கை முதலீட்டுச் சபையின் வலய முகாமைத்துவ பிரதம நிறைவேற்று பணிப்பாளர் தெரிவித்தார். காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய பகுதிகளில் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான அமைச்சரவை பத்திரம் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் இதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

மேலும் வடக்கு மாகாணத்தில் முதலீடுகளை ஊக்குவிக்க தயார் எனவும் இதற்கு ஆளுநரின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் இலங்கை முதலீட்டு சபையின் வலய முகாமைத்துவ நிறைவேற்று பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன்போது காணி, உள்ளூராட்சி திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச திணைக்களங்களின் அதிகாரிகளும் சுற்றுலாத்துறை ஒன்றியத்தினரும் வர்த்தக பிரமுகர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர். (நி-5-6-33-104)

## வெடிபொருட்கள் மீட்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழி முன்னூறு வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் பிற்பகல் வெடிக்காத நிலையில் ஒரு தொகுதி வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

வீட்டிற்கான அத்திபாரம் வெட்டும் போது வெடிக்காத நிலையில் மோட்டார் ஷெல் மற்றும் ஒரு தொகை தோட்டாக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் மேற் கொள்ளப்பட்ட முறைப்பாட்டினை அடிப்படையாக கொண்டு வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-30)

## தேயிலை கொழுந்து நடன போட்டி வட்டு இந்துக்கல்லூரி முதலிடம்



(யாழ்ப்பாணம்)

தேயிலை கொழுந்து நடன போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்று யா/வட்டு இந்துக் கல்லூரி மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட பரதநாட்டியப் போட்டி அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்றது. அதில் தேயிலை கொழுந்து நடன போட்டியில் வட்டு இந்துக் கல்லூரி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## கருவேல மரங்கள் தொடர்பில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள கருவேல மரங்களின் நன்மை, தீமை மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஆராய்ச்சி தொடர்பாக மாவட்ட மட்டத்தில் தீர்மா னம் எடுக்கப்பட வேண்டு மென மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க் கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதன் போது, விவசாயிகளுக்கு அறுவடைக்குரிய கடன்கள் வழங்கப்பட வுள்ளதாகவும், விவசாய அழிவுகள் ஏற்பட்டிருப்பின் அது தொடர்பாக அறிவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ள பயன்தரு மரங்களின் எண் ணிக்கை கணக்கிடப்பட வேண்டுமெனவும், பயன் தரு மரங்களாக புளியமரம், இலுப்பை மரம் மற்றும் கமுக மரங்கள் ஆகியவ ற்றை அதிகமாக நாட்டப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டன.

மேலும் கருவேல மரங்களின் நன்மை, தீமை மற்றும் அது தொடர்பாக மேற் கொள்ளப்பட வேண்டிய ஆராய்ச்சி தொடர்பாக மாவட்ட மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமென குறித்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (நி-5-6)

## உயிரிழந்த இளைஞனுடன் கைதான மற்றைய நபரிடமும் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்திரவதையால் உயிரிழந்த இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞனிடம் வாக்குமூலம் பெறவுள்ளதாக மனித வுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளின் போது அதன் ஒரு கட்டமாக சாட்சியங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளை எடுத்து வருவதோடு உயிரிழந்த இளைஞனுடன் கைது செய்யப்பட்ட மற்றைய இளைஞனிடம் வாக்குமூலம் பெறவுள்ளோம். அத்தோடு வேறு நபர்களிடமும் தேவைப்படும் பட்சத்தில் அவர்களின் வாக்குமூலங்களையும் பெற நடவடிக்கை எடுக்கப்படும். உடற்கூற்று பரிசோதனையின் முழுமையான அறிக்கையும் இதுவரை எமக்கு கிடைக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)

## யாழில் வீடொன்றின் மீது பெற்றோல்குண்டு தாக்குதல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் வீடொன்றின் மீது பெற்றோல்குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டு உடைமைகளுக்கு தீயும் வைக்கப்பட்டுள்ளது.

யாழ். ஒஸ்மானியா வீதியில் உள்ள வீடொன்றின் மீதே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீட்டின் கதவு, வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த மோட்டார் சைக்கிள் என்பவற்றின் மீது பெற்றோலை ஊற்றி தீ வைத்த பின்னர் வீட்டின் வளவுக்குள் பெற்றோல்குண்டு ஒன்றினை வீசி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33)



யா/இணுவில் இந்துக் கல்லூரியில் இந்துநாதம் சஞ்சிகை அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலெக்ஸ் மரண விவகாரம்

# பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இளைஞன் உயிரிழந்த சம்பவம் குறித்து இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் சிறி வொல்ட் கவலை வெளியிட்டுள்ளார்.

பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளை இளைஞன் உயிரிழந்தமை குறித்து ஆழ்ந்த கவலையடைகின்றேன்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளை மோசமாக நடத்தப்பட்ட சம்பவம் குறித்து இலங்கை அதிகாரிகள் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி-5-6)

## புலமைப்பரிசில் பரீட்சை- 2023 சித்தியடைந்தோர் விபரம்

**யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலை**

ஜெ.சரணியன்-165, கோ.சாருஜன்-146

**யா/மண்டைதீவு மகாவித்தியாலயம்**

அ.வைஸ்ணவி-171, வ.நமீசன்-153

**யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்**

த.வைஸ்ணயா-151,பா.றிக்ஸன்-149

# பிள்ளையார் பெருங்கதை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் விநாயக விரதம் (பிள்ளையார் கதை) ஆரம்பம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தினமும் 11.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜையுடன் பிள்ளையார் கதைபடிப்பு நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை பகல்11.30 மணிக்கு சதுர்த்தி உற்சவமும்,17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு மஹா கணபதி ஹோமமும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜையுடன் விநாயக பெருமான் திருவீதிவலம் வருதலை தொடர்ந்து பெருங்கதை விரதம் பூர்த்தியாகும் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (நி-5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 600 |
| தக்காளி | 400 | 350 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 150 | 150 |
| கோவா | 350 | 350 | 400 |
| கரட் | 350 | 380 | 500 |
| பூசணி | 120 | 100 | 100 |
| புடோல் | 250 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 300 | 300 |
| பாகற்காய் | 450 | 500 | 500 |
| வெண்டக்காய் | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 130 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 450 | 450 |
| லீக்ஸ் | 230 | 250 | 350 |
| பீற்றூட் | 180 | 200 | 400 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 800 |
| போஞ்சி | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 350 | 320 |
| கீரை – 1 பிடி | 100 | 100 | 200 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 400 | 500 | 500 |
| வெங்காயப்பூ | — | — | — |
| முள்ளங்கி | 120 | — | 300 |
| பொன்னாங்காணி | 40 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 200 |


## சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1989 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமை புரியும் திரு.கிறகோரி - சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01 ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 14 கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- அதற்கு அமைய இக்கூட்டங்களிற்கு சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக் குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இதில் இருவராவது 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும் ஆணையாளருக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**

**கிளைப் பொதுக்கூட்டங்கள் நடைபெறும் திகதி 2023.11.25, சனிக்கிழமை**

**நேரம்:- முற்பகல் 10.00 மணி**

| தொ இல | கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 129 | நாக்கணாவத்தை | முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையம், பிரதான வீதி, அளவெட்டி மேற்கு அளவெட்டி | திரு.சற்குணசிங்கம் பிறேமிலன் |
| 2 | 130 | அலுக்கை | பாரதி பொது மண்டபம், கும்பலை, அலுக்கை | திரு.நாகலிங்கம்-குமணதாசன் |
| 3 | 131 | பத்தானை | பாரதிதாசன் சனசமூக நிலையம், அளவெட்டி வடக்கு, அளவெட்டி | திரு.செகராசா-பகீரதன் |
| 4 | 132 | தஞ்சிட்டி | அறிவொளி சனசமூக நிலையம், அளவெட்டி வடக்கு, அளவெட்டி | திரு.இரத்தினராசா-கஜந்தன் |
| 5 | 133 | புன்னாலைக்கட்டுவன் | அறிவொளி சனசமூக நிலையம், அறிவொளி வீதி, குப்பிளான் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் | திரு.ஜோசேப்-ஜெகதாஸ் |
| 6 | 134 | கோட்டடி | சுவாமி ஆபிரகாம் சனசமூக நிலையம், குளமங்கால், மல்லாகம் | திரு.கந்தராசா-கண்ணதாசன் |
| 7 | 135 | மயிலங்காடு | ஞானகலா சனசமூக நிலையம், குப்பிளான் தெற்கு, குப்பிளான் | திரு.பரமசிவம்-தவப்பிரியன் |
| 8 | 136 | மடத்துவாசல் | சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் தலைமையக கட்டிடம் | திரு.சிவசிதம்பரம்-ஸ்ரீதரன் |
| 9 | 138 | ஸ்ரேசனடி | ஞானமுருகன் சனசமூக நிலைய ஞானமுருகன் விளையாட்டு கழகக் கட்டிடம், மயிலங்காடு | திரு.கனகரத்தினம்-வக்சன் |
| 10 | 139 | நவீனம் | காந்தரூபன் சனசமூக நிலையம், சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம் | திரு.வினாசித்தம்பி-சிவபாலன் |
| 11 | 140 | செல்லர்வளவு | சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் தலைமையக கட்டிடம் | திரு.கணபதிப்பிள்ளை-செந்தூரன் |
| 12 | 142 | டச்சுறோட் | தமிழ் ஒளி சனசமூக நிலையம், உடுவில் வடக்கு | திரு.மகேசன்-நிசாந்தன் |
| 13 | 144 | கல்லாரை | சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் தலைமையக கட்டிடம் | திரு.அருளானந்தம்-தயாளன் |
| 14 | 145 | ஈவினை | கலைமரசி சனசமூக நிலையம், ஈவினை கிழக்கு புன்னாலைக்கட்டுவன் | திரு.சபாரத்தினம்-அருள்நாதன் |

**கூட்டுறவு அபிவிருத்தி**
**உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**இல 857,கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**திரு.கி.சந்திரசேகரன்,**
**கூட்டுறவு அபிவிருத்தி**
**உதவி ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## காசாவில் தாக்குதல் 80 பேர் உயிரிழப்பு



(காசா)

வடக்கு காசாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 80 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன் 200 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளார்கள்.

வடக்கு காசா பகுதியில் பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் படையினரின் இந்தோனேசிய மருத்துவமனை முற்றுகை காரணமாக 550 நோயாளிகள் மருத்துவமனைக்குள் உரிய சிகிச்சை பெறாமல் தற்போது முற்றுகையிடப்பட்டுள்ளனர் என காசா சுகாதார அமைச்சின் பணிப்பாளர் வைத்தியர் முனிர் அல்-புர்ஷ் அல்-ஜசீராவிடம் தெரிவித்தார். (நி-5-6)

# 4 நாட்கள் போ

# ஒப்புக்கொண்ட



(காசா)

4 நாட்களுக்கு போர்
இஸ்ரேலின் அமைச்
காரம் வழங்கியுள்ளது

காசா இலக்குகள் மீதான தாக்குதல்களை சில நாட்களுக்கு நிறுத்த இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புக்கொண்டுள்ளது. நெதன்யாகு மீதான தொடர்ச்சியான அழுத்தங்களுக்கு மத்தியில் காசா ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் ஒப்புதல் அளித்துள்ளது.

போர் நிறுத்த காலத்தில், காசா பகுதியின் அனைத்து பகுதிகளிலும் யாரையும் தாக்கவோ அல்லது கைது செய்யவோ கூடாது என்பதில் இஸ்ரேல் உறுதியாக

## உளவு செயற்கைக்கோளை செலுத்திய வடகொரியா-அதிர்ச்சியில் தென்கொரியா

(சியோல்)

ஏவுகணைகளை அடிக்கடி சோதனை செய்து பார்ப்பதை வடகொரியா வழக்கமாகக் கொண்டுள்ளது. அமெரிக்கா, தென்கொரியா இணைந்து பல்வேறு தடைகள் விதித்த போதிலும், வடகொரியா அதற்கு கட்டுப் படாமல் தொடர்ந்து அதன் வேலையை செய்து வருகிற நிலையில் 3 ஆவதாக ஏவப்பட்ட உளவு செயற்கைக் கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியா சில மாதங்களுக்கு முன் உளவு பார்க்கும் செயற்கைக் கோளை செலுத்தியது. ஆனால் முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது. செயற்கைக்கோளின் பாகங்களை சேகரித்த தென்கொரியா, அது உளவு பார்க்கும் திறனற்றது எனத் தெரிவித்தது.



இந்த நிலையில், உளவு செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டு, சுற்றுப்பாதையில் நுழைந்ததாக வடகொரியா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கொரியா பதற்றம்-குறைப்பு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியை சஸ்பெண்ட் செய்துள்ளதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, உளவு செயற்கைக்கோள் செலுத்தியதை ஜப்பான் இன்னும் அதிகாரபூர்வமாக தெரிவிக்கவில்லை. இருந்த போதிலும் வடகொரியா செய லுக்கு கண்டனம் தெரிவித் துள்ளது.

வடகொரியாவின் செயல் ஐ.நா தீர்மானத்தை மீறியது மட்டுமல்லாமல், நமது நாட்டின் பாதுகாப்பிற்கான பயங்கரமான ஆத்திரமூட்டல் செயல் என தென் கொரியாவின் தேசிய பாதுகாப்பு கொள்கைக்கான துணை அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# இஸ்ரேலுக்கு ஆயுத

# உடனடியாக நி

## உலக நாடுகளை வலியுறு

(ரியாத்)

இஸ்ரேலுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதை உடன் நிறுத்துமாறு சவுதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மான் உலக நாடுகளை வலியுறுத்தியுள்ளார்.

தென்னாபிரிக்கா இணைய மூடாக முன்னெடுக்கும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடர்பில் விவாதி க்கப்பட உள்ளது.

இந்த நிலையிலேயே இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதியை கைவிட வேண்டும் என்று அனைத்து நாடுகளுக்கும் இளவரசர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், பாலஸ்தீன அரசை நிறுவுவதற்கு தீவிரமான மற்றும் விரிவான அமைதி செயல் முறையைத் தொடங்க வேண்டும்.

சவுதி அரேபியாவின் நிலை என்பது உறுதியானது. இரு நாடு தீர்வு தொடர்பான சர்வதேச முடிவுகளை நடைமுறைப்படுத்துவதைத் தவிர பாலஸ்தீனத்தில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை அடைய வழி இல்லை.

அப்பாவி மக்கள் கொல்லப்படுவது காசா பகுதியில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை ஏற்றுக் கொள்வதாக இல்லை. இவை அனைத்தும் உடனே நிறுத்தப்பட வேண்டும்.

காசா பகுதியில் இருந்து வலுக்கட்டாயமாக பாலஸ்தீன மக்கள் வெளியேற்றப்படுவதை சவுதி அரேபியா ஏற்கவில்லை.

அங்கு மனிதாபிமான நிலைமைகள் மோசமடைவதைத் தடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார் நிறுத்தம் ! டது இஸ்ரேல் !

போர்நிறுத்தத்திற்கு
மைச்சரவை அங்கீ
ள்ளது.




உள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இஸ்ரேல் சிறைகளில் உள்ள 150 பாலஸ்தீனிய பெண்கள் மற்றும் குழந்தைகள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இதற்கு பதிலடியாக ஹமாஸால் கடத்தப்பட்ட 50 இஸ்ரேலிய பணயக்கைதிகள் விடுவிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பணயக்கைதிகள் அனைவரையும் வீட்டிற்கு அழைத்து வர இஸ்ரேல் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் இந்த இலக்கை அடைவதே முதல் கட்டம் என்றும் பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக காசாவிற்கு மேலதிக மனிதாபிமான உதவிகளை அனுமதிக்கும் என்று இஸ்ரேல் கூறியுள்ளது.

இது குறித்து நெதன்யாகு தெரிவிக்கையில், தங்கள் அன்புக்குரியவர்களை திருப்பி அனுப்புவது "புனிதமான மற்றும் உயர்ந்த பணி" என்று கூறியுள்ளார். (நி-5-6)

## யானைத்தந்தங்கள் இறக்குமதிக்குத் தடை



(ஒட்டாவா)

உலகம் முழுவதிலும் அழிவினை சந்தித்து வரும் யானைகள் மற்றும் காண்டா மிருகங்களை பாதுகாக்கும் நோக்கில் கனடா அரசானது புதிய உத்தரவொன்றினை பிறப்பித்துள்ளது.

அந்த வகையில், கனடாவில் யானைத்தந்தங்கள் மற்றும் காண்டாமிருகக் கொம்புகள் ஆகியனவற்றை இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து, கனடாவின் சுற்றாடல் மற்றும் கால நிலை மாற்ற அமைச்சர் ஸ்டீபன் குயில்பியெல்ட் தெரிவிக்கையில்,

"காண்டாமிருகங்களின் கொம்புகள் மற்றும் யானைகளின்தந்தங்களைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கும், இந்த தடை நடைமுறைப்படுத்தப்படும். மற்றும் யானைத் தந்தங்கள் மற்றும் காண்டா மிருக கொம்புகள் நாட்டுக்குள் இறக்குமதி செய்வதற்கு விசேட அனுமதி அவசியம் எனவும் தெரிவித்தார்.

ஆபிரிக்க யானைகளும் காண்டாமிருகங்களும் அழிவடைந்து வருகிறன.

இந்நிலையில் அடுத்த தலைமுறையினருக்காக, யானைகள், காண்டா மிருகங்கள் என்பனவற்றை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது." என்றும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## யுதம் வழங்குவதை நிறுத்துங்கள்

### புறுத்திய சவுதி இளவரசர்



க்க கூட்டு முயற்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 7ஆம் திகதி முதல் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று சவுதி அரேபியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில், இஸ்ரேல் தாக்குதலுக்கு இதுவரை கொல்லப்பட்ட பாலஸ்தீன மக்களின் எண்ணிக்கை 14,128 என்றும் இதில் சிறார்கள் எண்ணிக்கை 4,000 ஐ கடந்துள்ளது என்றும் அதிகாரிகள் தரப்பு தெரிவித்துள்ளனர். (நி-5-6)

## புடினைக் கொல்வதற்கு உக்ரைனுக்கு உரிமை உண்டு

### ஜெலென்ஸ்கி

(கீவ்)

ரஷ்ய ஜனாதிபதி புடினை கொல்வதற்கான அனைத்து உரிமைகளும் உக்ரைனுக்கு உள்ளது என ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன்-ரஷ்யா இடையிலான போர் இரண்டாவது ஆண்டில் காலெடுத்து வைக்கும் நிலையில், போர் நிறுத்தத்திற்கான எத்தகைய நடவடிக்கைகளும் இதுவரை முன்னேற்றம் அடையவில்லை.

இந்தப் போர் நடவடிக்கையில் இதுவரை 2,50,000 இற்கும் அதிகமான இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதுடன் மில்லியன் கணக்கான மக்கள் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியேறி தங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

இந்நிலையில் சர்வதேச ஊடகமொன்றிற்கு அளித்த



பேட்டியின் போது, புடினை கொல்வதற்கான வாய்ப்பு கிடைத்தால் அதை உக்ரைன் எடுத்துக் கொள்ளுமா? என தொகுப்பாளர் கேட்ட கேள்விக்கு பதிலளித்து பேசிய உக்ரைனிய ஜனாதிபதி ஜெலென்ஸ்கி சுவாரஸ்யமான பதிலளித்தார்.

அதில், இது போர் நடவடிக்கை, உக்ரைனின் நிலப்பரப்பை பாதுகாத்துக் கொள்வதற்கான அனைத்து உரிமைகளும் உக்ரைனுக்கு உள்ளது.

அதுபோல ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை கொல்வதற்கான அனைத்து உரிமைகளும் உக்ரைனுக்கு உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய சாயிபாபாவின் ஜனனதினம் இன்று

*சத்திய சாயிபாபாவின் 98 ஆவது அவதார தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.*

பரப்பிரம்மம்சில வேளைகளில் அவதார புருஷர்களை அனுப்பித் தர்மத்தை நிலை நாட்டும். அரிய சந்தர்ப்பங்களில் தானே சில கட்டுப்பாடுகளுடனும் மாயா சக்தியுடனும் மனிதப் பிறப்பை (அவதாரம்) எடுக்கின்றது. இதனால் பலர் அவதாரங்களை ஞானிகளென்றும் தர்ம புருஷர்களென்றும் நினைக்கக்கூடும். தெய்வமே மனிதரூபத்தில் செயற்ப டுகிறதென்பதை விளங்குவது வில்லங்கமாயிருக்கும்.

முன்னைய யுகங்களில் அதர்மம் ஒருவனிடமே இருந்தது. பின்னர் அதர்மம் ஒரு குடும்பத்தில் மட்டுமே இருந்தது. தற்போது கலியுகத்தில் ஒவ்வொரு மனிதனுள்ளும் அதர்மம் உட்புகுந்து விட்டது. இந்த யுகத்தில் தர்மத்தை நிலைநாட்ட மனித குலத்தை அழிக்க முடியாது. ஆகவே மனித குலத்தை மேன்மையானதாக மாற்றுவதற்கே பரப்பிரம்மம் மனித அவதாரம் எடுக்கின்றது. பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா இப்போது மேலோங்கியுள்ள அதர்ம த்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட ஒரு அவதார காலம் போதாமையால் மூன்று அவதாரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ வேண்டியுள்ளதெனக் கூறியுள்ளார். மூன்று அவதாரங்கள் அடுத்து அடுத்து நிகழ்வதையே சாயி அவதாரம் என்றும் விளக்கியுள்ளார். மூன்று அவதாரங்களுள் முதலாவதான அவதாரம் ஷீரடி சாயிபாபா. மகராஷ்டிர மாநிலத்தில் (28.09.1835 - 15.10.1918) நிகழ்ந்து முடிந்தது. இரண்டாவதான அவதாரம் சத்திய சாயிபாபா. ஆந்திர மாநிலத்தில் புட்டபர்த்தி கிராமத்தில் (23.11.1926 - 24.04.2011) நிகழ்ந்து முடிந்துவிட்டது. மூன்றாவது அவதாரம் பிரேம சாயி. கன்னட மாநிலத்தில் நிகழும் என்றும் சத்திய சாயிபாபா கூறி யுள்ளார். இவ் அவதாரம் தற் போது நிகழ்ந்திருக்க வேண் டும். ஆனால் இன்னும் அவரால் பிரகடனப்படுத்தப்படவில்லை.

மூன்று அவதாரங்களும் முறையே சிவன், சிவசக்தி மற்றும் சக்தி என்பவையாகும். மூன்றும் செயல், பிரார்த்தனை, ஞானம் என்பதை வலியுறுத்துவதையே நோக்காகக் கொண்டுள்ளார்கள். பகவான் ஷீரடி சாயி பாபா, கடவுள்மீது அசையாத நம்பிக்கையும் பொறுமையும் ஏனையோருக்கு துன்பம் செய் யாமையையும் மையமாக வைத்திருக்கவேண்டுமென்று உபதேசித்து மக்கள் கேட்ட வரங்களைத் தாமதிக்காது அளிக்கின்றார். பகவான் சத்திய சாயி பாபா ஆன்மிக சாதனாக்களையும் தன்னலமற்ற சேவையை யும் செய்பவர்களுக்கு வரங்களைக் கொடுக்கின்றார். பகவான் பிரேம சாயி காலத்தில் ஆன்மிக சாதனா தீவிரமடைந்து தங்களின் தெய்வீகத் தன்மையை உணர அவர் அருள்புரிவார் என்பதை பகவான் சத்திய சாயிபாபா கூறியுள்ளார்.

பகவான் சத்திய சாயி பாபா தான் சாயிபாபா என்று பிரகடனப்படுத்தி 14 வயதிலேயே உற்றார், உறவினருக்கு அறிவித்து தான் பக்தர்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று கூறி வீட்டைவிட்டு வெளியேறினார். தனது முக்கிய நோக்கம், “மனிதர்கள் தங்களின் உள்ளுறையும் தெய்வீகத்தை உணர்ந்து உணர்வு எண்ணம், சொல், செயலில் எப்போதும் எங்கும் எந்நேரமும் வெளிப்படுத்த வைப்பதேயாகும்” என்று பிரகடனம் செய்துள்ளார்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் கல்வித் திட்டம் மிகவும் தனித்துவமானது. கல்வியின் நோக்கம் அறிவுத்திறன், செயற்திறன் மனித உன்னதமே என்ற அடிப்படையை வலியுறுத்தியுள்ளார். எல்லா நிலைக் கல்வியிலும் மனித மேம்பாடுகள் இணைக்கப்பட்டுள்ளன. இதை முன்பள்ளி முதல் பட்டப்பின் படிப்புவரை எவ்வாறு செயற்படுத்தலாம் என்று கல்வி நிறுவனங்களை நிறுவி செயலில் காட்டியுள்ளார். “கல்வியின் நிறைவு ஒழுக்கம்” என்பதையே மையப் பொருளாக வைத்துள்ளார். இத்திட்டத்தில் ஆசிரியரே மையப்படுத்தப்பட்டுள்ளார். ஆசிரியரானவர் குருவாக செயற்பட வேண் டும். கல்வியில் இறைவனுடன் இணைந்து செயற்பட பழக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார் சர்வமதக்கொள்கையைப் பின்பற்றவேண்டும். பெற்றோர், ஆசிரியர், பெரியோர்களை மதிக்கப் பழக்க வேண்டு மென்றும் கூறியுள்ளார்.

பகவான் மகா சமாதி அடைந்த பின்பு தனது சூட்சும நிலையில் பலருக்கு கனவிலும் படங்களிலிருந்து விபூதி, குங்குமம், தேனைச் சொரிந்தும் எழுத்துக் கள் மூலமாகவும் வழிபாட்டு அறைகளில் ஸ்தூல உடம்புடன் கூடிய உருவத்திலும் தென்பட்டுள்ளார்.

அவர் கூறிய முக்கிய செய்தி,



- நான் எங்கும் போனதில்லை. நான் எங்குமே இருக்கிறேன்.
- முன்னர் எனது தரிசனம் உங்களில் மன ஒருமைப்பாட்டை உண்டாக்கியது. இப்போது நீங்கள் ஆழ்ந்த தியானத்தில் என்னைத் தரிசிக்கலாம்.
- முன்னர் என்மூலமாக உங்களைப் பற்றி ஏனையோர் அபிப்பிராயம் செய்து கொண்டார்கள். சாயி அன்பர்கள் என்று சொன்னார்கள். இப்போது நான் பௌதீக உடலில் உள்ளே.

ஆகவே உங்க ளுக்கு மிகப் பெரிய பொறு ப்பு உண்டு. உங்களின் வாழ்க்கை மூலமாகவே மக்கள் தன்னை அறிவார்கள் என்று சாயி அன்பர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

நான் உங்களின் மூலமாகவே மிகுதியான வேலை களைச் செய்யப் போகிறேன் என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

**Dr. இ.கணேசமூர்த்தி,**
**சத்திய சாயி சேவா நிலையம்,**
**யாழ்ப்பாணம்.**


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 25 கற்குளம் வீதி ஆதன இல 32/4 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எம்.மொகமட் மொகதீன் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை, 04.06.1920 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கே.எஸ். வீரவாகு முகதாவில் 11401 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதி மற்றும் 19.08.1920 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கே.எஸ்.வீரவாகு முகதாவில் 12358 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதி ஆகியன தொலைந்தமையை சான்றுபடுத்திய ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்திற்கு 17.09.1936 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஆர்.சின்னத்துரை முகதாவில் 127 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதி தொலைந்தமையை சான்றுபடுத்திய ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது

குறித்த ஆதனத்தை சாகுல்கமீட் மொகட் மொகிதீன், மொகமட் உம்மா கனிபா 19.08.1957 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வி.நவரத்தினம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5929 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் மொகமட் மொகிதீன் உமர் அப்துல் காதருக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை மொகமட் மொகிதீன் உமர் அப்துல் காதர் 25.09.2003 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம்.எம்.எம்.ரமீஸ் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 382 ஆம் இலக்க நன்கொடை உறுதிமூலம் சலீமா உமர் அப்துல் காதருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை மொகமட் மொகிதீன் உமர் அப்துல் காதர் 28.10.2016 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜே. எஸ் .ஏ. மதுரநாயகம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2999 ஆம் இலக்க உறுதிப்படுத்தல் உறுதி மூலம் அப்துல் கபூர் அலி அக்பரும் பெண் சாலிமாவும் வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை “பள்ளு விளித்தோட்டம்” நிலப்பரப்பு 10 (பத்து) இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் வி.நகுலேஸ் அவர்களால் 17.02.2006 இல் அளந்து வரையப்பட்ட 13629 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் லொட் 04,05,06,07 எனக்குறிப்பிடப்பட்ட பகுதிகளாகிய நிலப்பரப்பு 10 (பத்தும்) வீடும் கிணறும், செய்பயிர் வான்பயிர்களும்.

இதற்கெல்லைகள்:-

கிழக்கு: தறுமு கனகலிங்கத்தின் ஆதனம்.
வடக்கு: ஸ்ரார் சனசமூகநிலையத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்.
மேற்கு: லொட் 3, வைத்தியநாதன் சபாபதிக்கும் கனகாம்பிகைக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம்.
தெற்கு: வெங்கடாலட்சுமி பெண் இராசுவின் ஆதனமும் ராஜன் மகாராணியின் ஆதனமும் சின்னர் லீலாவின் ஆதனமும்.

தற்போது அற்றோனித்தத்துவக்காரர் இளையதம்பி சற்குருநாதன் மூலம் அப்துல் கபூர் அலி அக்பரும் பெண் சாலிமா இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது அப்துல் கபூர் அலி அக்பரும் பெண் சலிமா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்யநடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்.**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(C-7100)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாருக்கு இடமாற்றம்; மலினப்படுத்தப்படும் உயிரின் பெறுமதி

## சிறீதரன் எம்.பி ஆவேசம்

(கிளிநொச்சி)

பொலிஸாரின் சித்திரவதையால் சாவடைந்த இளைஞனின் இறப்புக்கு நீதி தேவை என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கடந்த 8 ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சித்தன்கேணி நாகராசா அலெக்ஸ் என்னும் 26 வயது இளைஞன் பொலிஸாரின் அராஜகமான தாக்குதலால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் கடந்த 19 ஆம் திகதி உயிரிழந்துள்ளமை தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கோரி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இலங்கைப் பொலிஸ்மா அதிபருக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இளைஞனின் சாவுக்கு நீதியை வலியுறுத்திக்கோரும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த போதே குறித்த இளைஞன் வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் மிலேச்சத்தனமான தாக்குதல்களாலும் சித்திரவதைகளாலும் உயிரிழந்துள்ளார்.

தாக்குதல் மேற்கொண்ட இரு பொலிஸாருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை அநியாயமாகக் கொல்லப்பட்ட ஒரு அப்பாவி உயிரின் பெறுமதியை மலினப்படுத்துவதோடு, பொலிஸ் அதிகாரத்தனத்தின் வெளிப்பாட்டை மிகக்கோரமானதாகவும் பதிவு செய்திருக்கிறது.

எனவே இவ்விடயத்தில் கரிசனை கொண்டு, பொலிஸார் மீதான குற்றங்களை மறைத்து விசாரணையை மடைமாற்றும் வழக் கமானதும் நீதிக்குப்புறம்பானதுமான செயற்பாடு களைத் தவிர்த்து, இறந்துபோன இளைஞனின் உயிரை எந்தப் பிரயத்தனங்களாலும் மீட்டெடுக்க முடியாத கையறு நிலையிலுள்ள அவ் இளைஞனது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

---

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை-சுன்னாகம் ஏலவிற்பனை

எமது சபைக்குரிய 320 வெற்றுத் தார்பரல்கள் **30.11.2023 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தலைமை அலுவலக வளாகத்தில்** வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன. ஏலதாரராக கலந்து கொள்வோர் அன்றைய தினம் 10.00 மணிக்கு முன்னர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100.00 செலுத்தி தங்களைப் பதிவுசெய்வதன் மூலம் ஏலத்தில் பங்குபற்ற முடியும். சித்திபெற்ற ஏலதாரர் உரிய தொகையினைச் செலுத்தி அன்றைய தினமே பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

**திருமதி உ.சாரதா ,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.** (சி-7697)

---

## நல்லூர் பிரதேச சபை கொக்குவில் 2024 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள்,இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01.01.2024 ஆம் திகதி தொடக்கம் 31.12.2024 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 23.11.2023 - 04.12.2023 ஆம் திகதி வரைபி.ப 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி : 04.12.2023 ஆம் திகதி பி.ப 2.30 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 04.12.2023 ஆம் திகதி பி.ப 2.30மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை

**2024 ஆம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2024 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நீங்கலாக) | 1,000.00 | 35,000.00 | 32,765,780.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 10,000.00 | 950,000.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 876,060.00 |
| 4 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 1,000.00 | 5,000.00 | 121,230.00 |
| 5 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 1,000.00 | 5,000.00 | 153285.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 6 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 1,781,350.00 |
| 7 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 926,500.00 |

கேள்வி அறிவித்தல் தொடர்பான நிபந்தனைகளை 31.10.2023 ஆம் திகதிய வலம்புரி,தினக்குரல் பத்திரிகைகளில் பார்வையிடமுடியும். அத்துடன் அலுவலக நாட்களில் காலை 8.30 - மாலை 4.15மணி வரை அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

(சி-7698) **செயலாளர்,நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.** **23.11.2023**

---

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 06 . 11 . 1952

ஆண்டவன் அடியில் 30 . 11 . 2017

## அமரர். தம்பன் ஐயாத்துரை

திதி–கார்த்திகை மாதம் பூர்வபக்க ஏகாதசி

ஆறு ஆண்டுகள் மறைந்திருந்தாலும் உன்
நினைவுகள் எம் உள்ளத்திலிருந்து அழியாது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

காந்தி வீதி,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.

(17961)

தகவல்:
மகன் ஐ.ரஜனிகாந்தன் (C.T.B)
குடும்பத்தினர்.

---

## இருபத்தெட்டாண்டுகள் நீங்கா நினைவில்





**கனகசபை சண்முகசுந்தரம்** (சோமு)
(ஸ்தாபகர்,சிவன் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்)

**சண்முகசுந்தரம் சிவரூபன்** (டியூக்கோ)
(மாணவன்- யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி)

பிறப்பு-03.11.1941

மறைவு 23.11.1995

பிறப்பு-18.08.1983

நகர்ந்தாலும் ஆண்டுகள் நாலேழு இன்றுடன்
அகத்தில் சோகம் ஆறவில்லை இன்றுவரை
புகழோடு வாழ்ந்தீர் பலரும் போற்ற
உகத்தில் மறவோம் உங்களை என்றும்

(சி-7698)

"தர்க்கா இல்லம்",
இல .29, ஓட்டுமடம் வீதி,
ஓட்டுமடம்,வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 336





கந்தன்மாறன் யோக்கியமான பிள்ளை. தந்திர மந்திரங்களும், சூதுவாதுகளும் அறியாதவன். நந்தினியின் மோகன செளந்தரியம் அவனைப் போதைக்குள்ளாக்கிய போதிலும் அவள் இன்னொருவரின் மனைவி என்ற நினைவினால் தன் மனத்துக்கு அரண் போட்டு வந்தான். ஆனால் குந்தவைப் பிராட்டியோ கலியாணம் ஆகாதவள். அவளிடம் எப்படி நடந்து கொள்வது? எவ்வாறு பேசுவது? மனத்தில் வஞ்சம் வைத்துக் கொண்டு இனிமையாகப் பேச முடியுமா? அல்லது அவளுடைய அழகிலே மயங்கித் தன்னுடைய சபதத்தைக் கைவிடும்படியான மனத்தளர்ச்சி ஏற்பட்டு விடுமோ? அப்படி நேருவதற்கு ஒரு நாளும் இடங்கொடுக்கக் கூடாது. ஆ! இளவரசி எதற்காக இங்கே நம்மைப் பார்க்க வரவேண்டும்? வரட்டும் வரட்டும்! ஏதாவது மூர்க்கத்தனமாகப் பேசி மறுபடியும் வராதபடி அனுப்பிவிடலாம்.

இவ்விதம் கந்தன்மாறன் செய்திருந்த முடிவு குந்தவைப் பிராட்டியைக் கண்டதும் அடியோடு கரைந்து, மறைந்துவிட்டது. அவளுடைய மோகன வடிவும், முகப்பொலிவும், பெருந்தன்மையும், அடக்கமும், இனிமை ததும்பிய அனுதாபவார்த்தைகளும் கந்தன் மாறனைத் தன் வயம் இழக்கச் செய்து விட்டன. அவனுடைய கற்பனாசக்தி பொங்கிப் பெருகியது. தன்னுடைய பெருமையைச் சொல்லிக்கொள்ள விரும்பாதவனைப் போல் நடித்து அதே சமயத்தில் அவளுடைய கட்டாயத்துக்காகச் சொல்கிறவனைப் போலத் தான் புரிந்த வீரச்செயல்களைச் சொல்லிக் கொண்டான். தோள்களிலும், மார்பிலும் இன்னும் தன் உடம்பெல்லாம் போர்க்களத்தில் தான் அடைந்த காயங்களைக் காட்ட விரும்பாதவனைப் போல் காட்டினான். "அந்த சிநேகத்துரோகி வந்தியத்தேவன் என்னை மார்பிலே குத்திக் கொன்றிருந்தால் கூடக் கவலையில்லை. முதுகிலே குத்திவிட்டுப் போய் விட்டானே என்றுதான் வருத்தமாயிருக்கிறது. ஆகையினாலேதான் அவனுடைய துரோகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இல்லாவிடில், போரில் புறமுதுகிட்ட அபகீர்த்தியல்லவா ஏற்பட்டு விடும்? தோளிலோ, மார்பிலோ குத்திக் காயப்படுத்தியிருந்தால், அவனை மன்னித்து விட்டே இருப்பேன்!" என்று கந்தன் மாறன் உணர்ச்சி பொங்கக் கூறியது குந்தவைக்கு உண்மையாகவே தோன்றியது. வந்தியத்தேவன் இப்படிச் செய்திருப்பானோ, அவன் விடயத்தில் நாம் ஏமாந்து போய் விட்டோமோ என்ற ஐயமும் உண்டாகி விட்டது. நடந்ததை விவரமாகச் சொல்லும்படி கேட்கவே, கந்தன் மாறன் கூறினான். அவனுடைய கற்பனாசக்தி அன்று உச்சத்தை அடைந்தது நந்தினிக்கே வியப்பை உண்டாக்கிவிட்டது.

"பாருங்கள், தேவி! கடம்பூரில் தங்கிய அன்றே அவன் என்னை ஏமாற்றிவிட்டான். தஞ்சாவூருக்குப் புறப்பட்ட காரியம் இன்னதென்று சொல்லவில்லை. இங்கு வந்து ஏதோ பொய் அடையாளத்தைக் காட்டி உள்ளே நுழைந்திருக்கிறான். சக்கரவர்த்தியையும் போய்ப் பார்த்திருக்கிறான். ஆதித்த கரிகாலரிடமிருந்து ஓலை கொண்டு வந்ததாகப் புளுகியிருக்கிறான். அத்துடன் விட்டானா? தங்கள் பெயரையும் சம்பந்தப்படுத்தி, தங்களுக்கும் ஓலை கொண்டு வந்திருப்பதாகச் சொல்லவே கோட்டைத் தலைவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது. அவன் ஒற்றனாயிருக்கலாம் என்று ஐயுற்று அவனைக் காவலில் வைக்கச் சொல்லியிருக்கிறார். எப்படியோ தப்பித்துப் போய்விட்டான். அது விடயத்தில் அவனுடைய சமர்த்தை மெச்சத்தான் வேண்டும். நான் இந்தச் செய்திகளைக் கேட்ட போது என் சிநேகிதன் பகையாளியின் ஒற்றன் என்பதை மட்டும் நம்பவே இல்லை. அவனுடைய சுபாவத்திலேயே சில கோணல்கள் உண்டு. அப்படி ஏதோ அசட்டுத்தனம் செய்திருக்கிறான் என்று உறுதியாக நம்பினேன். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சத்தியமே வெல்லும்

அக்பருடைய சபையில் இருந்தவர்கள் அனைவரிலும், பீர்பால் மட்டுமே அக்பரின் பிரியத்திற்குப் பத்திரமானவராக இருந்தார். இதனால் பீர்பால் மீது சபையில் பலர் பொறாமை கொண்டிருந்தனர்.

ஒருநாள், பீர்பால் மீது பொறாமை கொண்டவர்கள் ஒன்று கூடி அவருக்கு எதிராக சதி ஆலோசனை செய்தனர். அவருக்கு எப்படியாவது கெட்ட பெயரை உண்டாக்கிவிட வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். ஒவ்வொருவரும் ஒரு யோசனை கூற, தாவூத் என்பவர் பீர்பாலை அவமானப்படுத்த தன்னிடம் ஓர் அருமையான திட்டம் இருப்பதாகக் கூறினார்.

"பீர்பாலைப்பற்றி தவறாக எது சொன்னாலும் சக்கரவர்த்தி நம்பமாட்டாரே!" என்று மற்றவர்கள் சந்தேகம் எழுப்ப, "சொல்கிற விதத்தில் சொன்னால், சக்கரவர்த்தி கட்டாயம் நம்புவார்" என்று தாவூத் அடித்துக் கூறினார். உடனே மற்றவர்கள் தாவூதை உற்சாகப்படுத்தினர்.



"என் திட்டம் வெற்றி பெற வேண்டுமானால், நீங்கள் எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்!" என்று தாவூத் கூற, "அது என்ன?" என்று மற்றவர்கள் கேட்டனர்.

"நாளைக்கு நீங்கள் அனைவரும் வழக்கப்படி குறித்த நேரத்தில் தர்பார் வந்து சேருங்கள்.

நான் மட்டும் தாமதமாக வருவேன். நான் ஏன் வரவில்லை என்று சக்கரவர்த்தி உங்களைக் கேட்பார். உடனே நீங்கள், "தாவூத் ஒரு பயங்கரமான குற்றத்தைத் தன் கண்களால் பார்த்து விட்டார். அது அவருடைய மனத்தை மிகவும் பாதித்து விட்டது. அதனால் அவர் தாமதமாக வருவார்" என்று சொல்லிவிடுங்கள். பிறகு நான் வந்து அது என்ன என்று அவரிடம் விளக்கிக் கூறுவேன்" என்று கூறினார் தாவூத்.

அனைவரும் அதற்கு சம்மதித்தபின் வீடு திரும்பினர். மறுநாள், தர்பார் கூடியது. பீர்பால் உட்பட அனைவரும் குறித்த நேரத்தில் தர்பாருக்கு வந்து விட்டனர். தாவூத் மட்டும் வரவில்லை. அக்பர் தர்பாரில் நுழைந்ததும் அனைவரும் எழுந்து சலாம் செய்தனர். அக்பரும் புன்னகைத்தபடி தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அனைவர் மீதும், தன் பார்வையை செலுத்தினர். அதற்குள் ஒருவன் எழுந்து, "பிரபு! தாவூத் இன்று தாமதமாக வருவதற்குத் தங்களிடம் அனுமதி கோரியுள்ளார்!" என்றார்.

"தாமதமாக வர என்ன காரணம்?" என்று அக்பர் கேட்டார். "ஒரு பயங்கரமான குற்றத்தை தன் கண் முன்னே நடக்கக் கண்டார். இதனால் அவருடைய உடல் சோர்ந்து விட்டது. ஆகையால் சிறிது தாமதமாக வருவதாகக் கூறியுள்ளார்!" என்றார் அவர்.

சற்றுநேரத்தில் தாவூதே வந்து சேர்ந்து விட்டார். உடனே அக்பர் அவரைப் பார்த்து, "ஒரு பயங்கரமான குற்றம் நிகழ்வதை நீ பார்த்தாயாமே!" என்று கேட்டார்.

"ஆம் பிரபு!" என்றார் தாவூத். "அது என்ன குற்றம்? உடனே சொல்! யார் அந்தக் குற்றவாளி?" என்று அக்பர் சீறினார்.

"அதை எப்படி என் வாயால் சொல்வேன் பிரபு? உங்களுடைய மிகுந்த நம்பிக்கைக்கும், அபிமானத்திற்கும் பாத்திரமான அவரைப் பற்றி என் வாயினால் எப்படிச் சொல்வேன் பிரபு? அதைக் கேட்டால், உங்கள் மனம் மிகவும் புண்படுமே!" என்று தாவூத் நாடகமாடினார். சட்டத்தின் முன் அனைவரும் சமம்! அவன் யாராயிருந்தாலும் சரிதான்! அவன் யாரென்று உடனே சொல்!" என்று அக்பர் உறுமினார்.

"வேறு யாருமில்லை பிரபு! உங்களுடைய பீர்பால்தான் அது!" என்றதும் அக்பர் அதிர்ச்சியுற்றார். பீர்பலும் அதிர்சசியுற்றார். ஆனால் பீர்பால் உடனே விடயத்தைப் புரிந்து கொண்டார். தன் மீது வீண் பழி சுமத்த தாவூத் திட்டமிட்டுள்ளார் என்று தெரிந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைக்குரிய அனைத்துச் சாதனைகளும் ஊக்கத்தினாலும் இதயபூர்வமாகவும் செய்யப்பட்டவையே – ஜேம்ஸ் ஆலன்

வலம்புரி

TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஊர்களில் கடமையாற்றும் பொலிஸார் அடாவடித்தனம் புரிகின்றனரா?

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் சித்திரவதை செய்யப்பட்டு மரணமடைந்ததாகக் கூறப்படும் சித்தங்கேணி இளைஞர் குறித்த விவகாரம் எங்கும் பேசுபடுபொருளாகியுள்ளது.

இதுபற்றி நேற்றைய தினம் இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

இப்போது இவ்விவகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்பட்டிருப்பதால், அதுபற்றிய முடிவுகள் விரைவில் வெளிவரும் என்பதால் அந்த விடயம் ஒருபுறமிருக்க,

ஊர்களில், கிராமங்களில் இயங்குகின்ற பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸார் மிகமோசமான அடாவடித்தனங்களில் ஈடுபடுவதாகப் பலரும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதாவது நகரங்களில் கடமையாற்றுகின்ற பொலிஸார் சட்டதிட்டங்களைப் பின்பற்றுகின்றனர்.

நகரங்களில் வாழுகின்ற மக்களின் கல்விப்புலம் மற்றும் பொலிஸ் தலைமையின் கண்காணிப்பு என்பன நகரங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸாரை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தியுள்ளது.

ஆனால் ஊர்களில் உள்ள பொலிஸார் நாட்டாண்மைத்தனமாக நடந்து கொள்கின்றனர். அங்கு இலஞ்ச ஊழல் மேலாடுகிறது.

சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களின் கட்டுப்பாட்டிலேயே பொலிஸார் இயங்குகின்றனர்.

அதுதவிர சண்டித்தனக்குழுக்களுடன் பிரஸ்தாப பொலிஸாருக்கு நெருங்கிய தொடர்பு உண்டு.

இதன் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் எதுவும் செய்ய முடியாமல் அடங்கி ஒடுங்கி இருக்கின்றனர் என்பதான விடயங்களும் பொதுமக்களால் முன்வைக்கப்படுகின்றன.

ஆம், வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்திரவதையால் உயிரிழந்ததாகக் கூறப்படும் சித்தங்கேணியைச் சேர்ந்த இளைஞர் நாகராசா அலெக்ஸின் மரணத்தையடுத்து, ஊர்களிலும் கிராமங்களிலும் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸார் குறித்துப் பொதுமக்கள் குமுறத் தொடங்கியுள்ளனர்.

இத்தகைய பொலிஸாரில் ஒரு தரப்பினர் ஏலவே குற்றச்செயல்களில் ஈடுபட்டு அதற்காக இடமாற்றத் தண்டனை பெற்றவர்கள்.

இவர்களிடம் நேர்மையான சேவையை எதிர்பார்க்க முடியாது.

இத்தகையவர்கள் இலஞ்சம் பெறுவதையே இலக்காகக் கொண்டு செயற்படுகின்றனர்.

இவ்வாறான மோசமானதொரு சூழ்நிலையின் விளைவுதான் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நடந்த சித்திரவதை.

எனவே கிராமங்களில் இருக்கக்கூடிய பொலிஸ் நிலையங்கள் மீது பிராந்திய பொலிஸ் தலைமையகம் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும்.

அங்குள்ள பொலிஸார் அந்தந்த ஊர்களில் எப்படி நடந்து கொள்கின்றனர் என்பது தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதும் அவசியம்.

இல்லையேல் ஊர்களில் பொலிஸ் அராஜகம் தலைவிரித்தாடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

### இலத்திரனியல் ஊடகங்களுக்கான

# ஒலி,ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இலத்திரனியல் ஊடகங்களுக்கான ஒலி, ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டத்தை அறிமுகப் படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை உயரிய வகையில் பாதுகாத்து, சிறந்த ஊடகத் துறையை உறுதிப்படுத்தும் நோக்கில், இலத்திரனியல் ஊடகங்களுக் கான ஒலி, ஒளிப்பரப்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழு சட்டத்தை அறி முகப்படுத்துவதற்காக சட்டமூல மொன்றை தயாரிக்க வெகுசன ஊடக அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை கடந்த செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டது.

முன்மொழியப்பட்டுள்ள சட்ட மூலத்தை தயாரிக்கும் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய கொள்கை ரீதியான விடயங்கள் பற்றி பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் தலைமையில் அமைச்சரவை உப குழுவொன்று உருவாக்கப்பட்டது. இந்த குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள ஒலி, ஒளிபரப்பு ஆணைக் குழு சட்ட மூலத்தை தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்வதற்காக பொருத்தமான ஏற்பாடுகளுடன் கூடிய அடிப்படை சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆரம்ப வரைவின் அடிப்படையில், சட்ட மூலத்தை தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ந-7)

### வடக்கு– கிழக்கில்

## கடற்றொழில் அபிவிருத்திக்கு ஜப்பானிய அரசு நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடல் தொழில் சார் அபிவிருத்திகளுக்காக ஜப்பான் அரசாங்கம் 03 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்கியுள்ளது.இது தொடர்பான ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

ஒப்பந்தத்தில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேகி நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேகி மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது வடக்கு-கிழக்கு கடல் தொழில் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்பட்டமைக்கமைய ஜப்பான் அரசாங்கம்குறித்த நிதியுதவியை வழங்கியுள்ளது.

இந்த நிதி கடல் தொழிலுக்கான குளிரூட்டல் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் நவீன உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பவற்றிற்காக பயன்படுத்தப்படவுள்ளது. (ந-7)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குளாய் பகுதியில் நேற்று இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக பதிவுகளின்றி இடியன் துப்பாக்கி வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்குளாய் கிழக்கு பகுதியிலுள்ள வீட்டிற்கு சென்ற பொலிஸார் வீட்டினை சோதனை செய்த போது பதிவுகள் ஏதுமின்றி சட்டவிரோதமாக துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததன் பேரிலே 32 வயதுடையவர் இடியன் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார். (ந-7)

## மின்சார வேலியில் சிக்குண்டு கொம்பன் யானை உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பெரிய சாளம்பன் கிராமத்தில் வயல் நிலத்தின் பாதுகாப்புக்காக இடப்பட்ட மின்சார வேலியில் சிக்குண்டு சுமார் 15 வயது மதிக்கத்தக்க கொம்பன் யானையொன்று நேற்றிரவு உயிரிழந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மின்சார வேலியினை இணைப்புச் செய்த காணியின் உரிமையாளர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவருவதுடன்சாளம்பன் கிராமத்தில் காட்டு யானையினால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ந-7)

## மண் சரிவில் சிக்கி இரு சிறுமிகள் பலி

(ஹாலி எல)

மண் சரிவில் சிக்கி இரண்டு சிறுமிகள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று மாலை ஹாலி எல பிரதேசத்தில் பெய்த கன மழை காரணமாக ஹாலிஎல உடுவர 06 வது மைல்கல் பகுதியில் உள்ள கந்தகொல்ல பத்தனையில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதன்போது அதற்கு அருகில் இருந்த வீடொன்றில் வசித்து வந்த இரண்டு சிறுமிகள் மண் சரிவில் சிக்கினர்.

அவர்களை பதுலு பொது வைத்தியசாலையில் அனுமதித்த போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். (ந-7,9)

## பரதநாட்டியத்தை அவமதித்தது கண்டனத்துக்குரிய குற்றம்

### அகில இலங்கை உலமா சபை

(கொழும்பு)

பரத நாட்டியம் தொடர்பில் மௌலவி ஒருவர் தவறாகப் பேசிய விடயம் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்த அகில இலங்கை உலமா சபை தனது கண்டனங்களை வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் மாநாடு மாளிகாவத்தை ஜம்இய்யதுல் உலமா தலைமைக் காரியாலத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது .கருத்துரைத்த அவ் அமைப்பின் பொதுச் செயலாளர்,

மதம் மற்றும் கலாசார விழுமியங்கள் நிந்திக்கப்படும் வகையில் கருத்து தெரிவிக்கப்பட்டிருப்பது இஸ்லாமிய வழிகாட்டலுக்கு முரணானதும் கண்டனத்திற்குரியது மாகும் என்றார். (ந-7)

வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை - 2023

“குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டுபண்ணும். என்னால் செய்யக் கூடிய சிறிய பணி மரங்களை நடுவது தான்.” - *வங்காரி மாதாய்*

*(அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)*

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வெள்ளிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை என்னும் பிரதேசத்தில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகை அறிவித்தல்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG - 2023)

01) தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரை யிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.

02) தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03) கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாத வராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

04) அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களை அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் 23.11.2023 ஆம் திகதியிலிருந்து 06.12.2023ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

05) அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் 23.11.2023 ஆம் திகதியிலிருந்து 06.12.2023 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06) விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு 07.12.2023 ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே (07.12.2023 பி.ப 14.00) வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

07) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

08) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிடம் இருந்து பெற்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | வீதி விளக்குகளின் எண்ணிக்கை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/ PSDG/W/02/2023 | Supplying of 30W LED Sreet Lights at Pachchilaipalli Pradeshiya Sabha | 75 Nos ±10 % | 6,500.00 | 21.02.2024 |

**தயானந்தன் தர்சினி,**
தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

(C-7703)

# 2024ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையானது 2024ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்ட வழங்குபொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள். உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள். வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது. விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் 29.12.2023ஆம் திகதி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொகுதிகள்**

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)

தொகுதி "B" - சேவைகள் / வேலை

தொகுதி "C" - வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொ.இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A - 01 | அனைத்து காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/இரும்பு/உருக்கு) |
| A - 03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | யன்னல் திரைச்சிலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள், மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டிட இரும்புப்பொருட்கள், தீந்தைகள் வாணிஸ் மற்றும் இரும்பு பொருட்கள் |
| A - 07 | மின்சார பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டார்கள், மின்சார பல்ப்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், திரவங்கள் மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், டயர், ரீயூப் மற்றும் ஏனையவை |
| A - 11 | தோல் உற்பத்திப்பொருட்கள், தொழிலாளர்களுக்கான நீளச் சப்பாத்துக்கள் |
| A - 12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A - 14 | இரும்புப் பொருட்கள் |
| A - 15 | கற்கள், மண்வகைகள் |
| A - 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A - 17 | பனைமரங்கள், சலாகைகள் |
| A - 18 | பாதணிகள், தோல்ப்பொருட்கள் |
| A - 19 | அலங்காரப்பொருட்கள் |
| A - 20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |

| தொ.இல | சேவைகள் / வேலை |
|---|---|
| B - 01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கலும் |
| B - 02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் (மின் விசிறி, தொலைநகல், நிழற்பட பிரதி இயந்திரம், கணனி, விரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரம்) |
| B - 04 | மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தலும் மீளமுறுக்குதலும் |
| B - 05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள், அச்சிடுதல், பெயர்ப்பலகை, பனர்கள் ஞாபகார்த்த பலகை தயாரித்தல் ஏனையவை |
| B - 06 | கட்டிட அமைப்பும் திருத்தவேலைகளும், வீதி அமைத்தலும் புனரமைத்தலும் |
| B - 07 | உள்ளகத் தொலைபேசி வலையமைப்பு, இணைய வசதி வழங்கல் மற்றும் பராமரிப்பும் |
| B - 08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B - 09 | கோலவுடை தைத்தல் |
| B - 10 | இறப்பர் முத்திரை வகைகளைத் தயாரித்து வழங்கல் |
| B - 11 | சுத்திகரிப்புச் சேவையும் பாதுகாப்புச் சேவையும் |
| B - 12 | வளிச்சீராக்கி திருத்தம், சேவிஸ் செய்தல் |

| தொ.இல | வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C - 01 | சகல விதமான வாகன திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம் சீர் என்பவற்றிற்கான குசன் வேலைகள் |
| C - 02 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு |
| C - 03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

**நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரர்களும் பதிவு செய்து கொள்ள விரும்பும் ஒவ்வொரு தொகுதிக்குமாக வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக் கப்பட வேண்டு மெனபதுடன் விண்ணப்பங்களுக்காக மீளளிக்கப்படாத பதிவுக்கட்டண மாக ரூபா 500.00 (காசாக) வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி, மானிப்பாய் என்ற முகவரியில் உள்ள எமது தலைமை அலுவலகத் தில் அலுவலக நாட்களில் (மு.ப 9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை) பணத்தினை நேரடியாகச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்று பூரணப்படுத்தி பற்றுச்சீட்டுடன் அனுப்புதல் வேண்டும்.
2. விண்ணப்பங்களை அனுப்பும் போது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2024** எனக் குறிப்பிட்டு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி, மானிப்பாய் என்ற முக வரிக்கு 31.12.2023ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. வழங்கல் / சேவைகள் 2024ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
4. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களில் திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை சபையின் செயலாளருக்கு உண்டு.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 021 225 6650 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்**
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய். 23.11.2023

(C-7702)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்ரெம்பர்...

இந்த கொடுப்பனவு பகிர்ந்தளிக்கப்பட வுள்ளதாகக் குறிப்பிட்ட அவர்,

குறித்த பணம் இன்று முதல் பய னாளிகளின் வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்படும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் அஸ்வெசும நலன்புரி திட்டம் தொடர்பில் கிடைக்கப்பெற் றுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான பரிசீல னைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், மீளத் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு ஜூலை மாதத்தில் இருந்து கொடுப்பனவு வழங்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித் தார். (ந-7)

## முடிந்தால்...

பெற்ற பாராளுமன்ற அமர்வின்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு சவால் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“225 பேரின் வாக்குகளை விட நாட்டு மக்களின் சர்வஜன வாக்கு ரிமை மதிப்புமிக்கது.

ஜனாதிபதியின் செல்வாக்கை பயன்படுத்தி தேர்தலை ஒத்திவைத்த போதிலும், 220 இலட்சம் பேரினதும் ஆணை கிடைக்க வேண்டும் என்ற விருப்பம் ஜனாதிபதிக்கு இருந்தால் முதலில் உள்ளூராட்சி மன்றத் தேர் தலை நடத்த வேண்டும்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2020 பொதுத் தேர்தல் ஆணைகளுக்கு மாறாக நாட்டு மக் களின் உண்மையான ஜனநாயகமே இப்போது முக்கியமானது.

தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்த போது ‘மகிந்த திருடன் எமக்கு வேண்டாம்’ என கூறி கத்தினாலும், திருடன் என்பவருடன் பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாடியுள்ளார்.

ஜனாதிபதி ரணில்தற்போது மக்களின் அபிப்பிராயம், மக்கள் ஆணையை புறந்தள்ளி, தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில் தீர்மானங்களை மேற் கொண்டு வருகின்றார்.

ஜனாதிபதியின் பொறுப்புகள் பற்றி பேசினால் உள்ளூராட்சி மன்ற தேர் தலை நடத்துவது அவரின் பொறுப் பாகும். இவ்வாறு மக்கள் ஆணையை உரசிப்பார்க்க வாய்ப்பு கிடைக்கு மாயின், கிடைக்கும் மக்கள் ஆணை யின் கீழ் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயார்” என தெரிவித்தார். (ந-7,9)

## அடுத்தாண்டு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிபடத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரி வித்த அவர்,

இந்த நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டியுள்ளோம். எனவே, தேர்த லுக்கு பயப்படுகிறோம் என்று எப்படிச் சொல்ல முடியும். தேர்தலை நடத்து வோம். ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் இரண்டும் அடுத்த வருடம் நடைபெறவுள்ளது. அவை எதுவும் ஒத்திவைக்கப்படாது எனவும் அதுமட்டுமல்லாது அடுத்த வருடம் மாகாண சபை மற்றும் உள்ளூ ராட்சி சபைத் தேர்தல்களையும் நடத்த லாம். எந்த பிரச்சினையும் இல்லை எனவும் தெரிவித்தார். (ந-7,9)

## குற்றவாளி...

ஒதுக்கீட்டுக்கு வாக்கெடுப்பை கோரி னார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அதனைத் தொடர்ந்து சபையின் இறுதியில் நிதி ஒதுக்கீட்டுப் பிரே ரணைக்கு சபாநாயகர் சபையின் அனு மதியைக் கோரினார்.

இதனையடுத்து இடம்பெற்ற வாக் கெடுப்பில் ஜனாதிபதிக்கான நிதி செலவினங்களுக்கான ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 62 வாக்குகளும் எதிராக 3 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலை யில் 59 மேலதிக வாக்குகளினால் ஜனாதிபதிக்கான நிதி செலவினங் களுக்கான ஒதுக்கீடு நிறைவேற்றப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஐந்து மனித...

தடயவியல் பொலிஸார், கிராம சேவை யாளர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோம தேவ தலைமையிலான குழுவினரால் இவ் அகழ்வாராய்ச்சி முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

நேற்றைய அகழ்வுப் பணியின் போது ஐந்து மனித எச்சங்கள் முழுமை யாக தோண்டி எடுக்கப்பட்டதுடன் துப் பாக்கி சன்னங்களும் மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கொக்குத்தொடு வாய் மனிதப் புதைகுழியின் அகழ் வாய்வு நடவடிக்கைகள் கடந்த செப் ரெம்பர் மாதம் 06 ஆம் திகதி ஆரம்பிக் கப்பட்டு செப்ரெம்பர் 15 வரை இடம் பெற்றிருந்தது.

இவ் அகழ்வு பணியில் நேற்றுடன் 24 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட் கப்பட்டதுடன் துப்பாக்கி சன்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயன் படுத்தும் இலக்கத் தகடு கள் மற்றும் சீருடைகள் உள் ளிட்ட சான்றுப் பொருட்களும் மீட்கப்பட்டுள் ளன.

இன்று நான் காம் நாள் அகழ் வுப் பணி இடம் பெறவுள்ளது.

அத்துடன் நேற்றைய தினம் மீட்கப்பட்ட இலக் கத் தகட்டில் த.வி.பு - இ0043 என்ற இலக்கம் பொறிக்கப்பட் டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ந-7,9,299)

## பொரு...

பாராளுமன்றில் நேற்று உரை யாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில்,

“நாட்டின் பொருளாதாரத் துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத் திலோ, பொருளா தாரத்தை சீர் குலைக்கும்வகை யிலோ அல்லது மோசடியில் ஈடு படுவதற்காகவோ நிதியை பயன் படுத்தினால் அதற்கு நிறை வேற்று அதிகாரம் பொறுப்புக் கூற வேண்டும்.

அந்தவகை யில் நீதிமன்ற தீர்ப்புக்கு நிறை வேற்று அதி காரம் கட்டுப்பட வேண்டும்.

எனவே, பொருளாதார நெருக்கடிக்கு காரண மானவர்கள் குறித்து தேவையேற்படின் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், இதுதொடர்பாக விசா ரணை நடத்த ஜனாதிபதிக்கும் அமைச்சர வைக்கும் அதிகாரம் உள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் தவறி ழைத்துள்ளனர் என ஆணைக்குழு பரிந்துரைத்தால் அதனை அடிப்படை யாகக்கொண்டு குறிப்பிட்ட நபர்களின் குடியுரிமையை 7 ஆண்டுகளுக்கு இல் லாது செய்ய முடியும்.

இதற்கான யோசனையை அமைச் சரவையின் அனுமதியுடன் பாராளு மன்றத்திலும் முன்வைக்கலாம்.

அதனை பாராளுமன்றில் நிறை வேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும் பான்மை பலம் அவசியம்” என அவர் மேலும் தெரிவித்தார். (ந-7,9)


தன நிதானய
திகதி - 2023.11.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1336
P 36 55 60 67 P
00535

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3548
சீட்டிழுப்பு திகதி 22.11.2023
G 18 35 70 80
G 06580

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.22
சீட்டிழுப்பு இலக்கம் 615
கன்னி 43 46 49 51 கன்னி
31157 02

மஹஜன சம்பத
திகதி 2023/11/22
சீட்டிழுப்பு இலக்கம் 5306
S 8 3 4 7 4 3

மெகா பவர்
திகதி 22/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1654
F 08 12 38 39 41
04828

லக்கி 7 VIP
திகதி 2023.11.22
சீட்டிழுப்பு இலக்கம் 132
H 3 1 9 8 6 1 H

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 22.11.2023 வெற்றி வாரம் 014 வர்ணம் பசுமை
J 3 1 9 0 4 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,945,260.80
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2280 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.11.22 தினம் புதன்கிழமை
08 24 49 61 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,596,284.00

சனிதா
திகதி 2023.11.22 வெற்றி வாரம் 4441 வர்ணம் ஊதா
25 60 62 63 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,634,812.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3992 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.11.22 தினம் புதன்கிழமை
15 28 31 33 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,909,756/-

கப்ருக
R 10 37 40 52 57
சீட்டிழுப்பு வாரம் 1456
2023.11.22 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 468,281,784.20

ஜயோதா
திகதி 2023.11.22 வெற்றி வாரம் 1976 வர்ணம் மஞ்சள்
13 18 24 29 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 20,612,588.00

அத கோடிபதி
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2106
வர்ணம்: ரோஸ்
சீட்டிழுப்பு திகதி: 2023.11.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,949,768/-
21 28 54 60 N


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம், வல்வெட்டித்துறை

பாராட்டி வாழ்த்துகின்றோம்

### தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை - 2023

congratulations



செல்வி
உதயசேகர் சஜானி
(புள்ளிகள் - 152)



செல்வன்
தனீஸ்வரன் கரீஸ்
(புள்ளிகள் - 145)



செல்வி
கணேசலிங்கம் கவிஷனா
(புள்ளிகள் - 165)

(C-7701)

2022 இல் சித்தியடைந்த மாணவி

இவர்களுடன் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| செல்வன் ஜெ.ஷாருக்கான் | - 140 | செல்வி அ.மிதுஷா | - 103 |
| செல்வி ச.சஞ்சனா | - 130 | செல்வன் ஜெ.விசானுகன் | - 100 |
| செல்வன் அ.டிலோஜன் | - 129 | செல்வி பு.ரம்யா | - 96 |
| செல்வன் வ.அஜிஷாத் | - 121 | செல்வன் ஜீ.சகானன் | - 91 |
| செல்வி ந.வின்சிகா | - 120 | செல்வி அ.ஆரண்யா | - 84 |
| செல்வி கு.கஸ்வினா | - 114 | செல்வி ரா.சஸ்விகா | - 72 |
| செல்வி ஜெ.சானுகா | - 106 | | |

2022 இல் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 17 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அனைத்து மாணவர்களையும் வழிப்படுத்திய அதிபர் திரு.சி.லிங்கனதாஸ், கற்பித்த ஆசிரியர்களான திருமதி அ.ஜெகநாதன்(2023), திரு.சி.சிவரூபன்(2022) மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம், வல்வெட்டித்துறை.

---

உ
ஓம் சாய் ராம்



## கருணையூர் ஸ்ரீ அபய சீரடி சாய்நாதர் ஆலயம்

கார்த்திகை தீப திருநாளை முன்னிட்டு இடம்பெறும்

### இலட்ச தீப வழிபாடு

26.11.2023 அன்று மேற்படி
ஆலயத்தில் காலை 8 மணிமுதல் இடம்பெறும்
பங்கெடுத்து பலன் பெற அன்போடு அழைக்கின்றோம்.



கரணவாய்,
கரவெட்டி.

தகவலுக்கு:
077 389 1421

ஊடக அனுசரணை:
கலைவாணி கண்ணாடி களஞ்சியம் & ரெக்ஸ்
நெல்லியடி, கரவெட்டி.

(17953)

---

## மரண அறிவித்தல்

தோற்றம்
1945 . 02 . 04



மறைவு
2023 . 11 . 22

### நாகலிங்கம் ஜெகதீஸ்வரன்
### (வெள்ளைத்தம்பி)

யாழ்.கோண்டாவில் மேற்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஜெகதீஸ்வரன் அவர்கள் 22.11.2023 நேற்று புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - மனோன்மணி தம்பதிகளின் அருமை மருமகனும் வனசாவின் அன்புக் கணவரும் சுபாசினி, சசிக்குமார், சபேஸ்குமார், ரேவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் வசிகரன், சிவராணி, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வைசு, அக்சயன், அஸ்வந், அதித்தி, மகிஷா, பரணிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ரட்ணராஜா, காலஞ்சென்றவர்களான விக்னராஜா, விமல்ராஜா மற்றும் சியாமினி, சாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.11.2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 11.00 மணியளவில் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
077 023 9222

(17965)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17944)

076 825 7716 (ஆகாஸ்)

விரைவு பொதிகள் சேவை

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.

Lanka Cargo
Worldwide
Express

இல. 315, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

070 375 0002

(17936)

Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Visa Consultant
134, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna.

077 038 5584

(17936)

வெளிநாடுகளுக்கான
விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள்
5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

0777 554 528

(17945)

உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

(C-7706)

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

CANADA
VISITOR VISA

VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7706)
0777-068-777
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்

V2 TRAVELS

டீசல் TANK
விற்பனைக்கு

14000l Pamp உடன்
Diesel Tank
விற்பனைக்கு உண்டு.

(17957)

077 386 6250


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org